



# A-லைன் குர்தா

*ஸ்டைலிஷான ஒரு ஏ-லைன் குர்தாவ உருவாக்க ஆசைப்படறவரா இந்த டுடோரியல் உங்களுக்கானதுதான்.*

தேவையான பொருள்கள்

3 மீட்டர் துணி
நெக் ஃபேசிங்குக்கு அரை மீட்டர் காட்டன் துணி
உங்க www.ushasew.com வெப்சைட்டிலிருந்து ஏ-லைன் குர்தாக்கான டெம்ப்ளேட்டை நீங்க டவுன்லோட் செய்துக்கலாம்.
தண்ணில அழியற மார்க்கர் பேனா
ஸ்கேல்
அளக்கற டேப்
கத்தரிக்கோல்
மணிகோர்த்த பின்
மேட்சிங் நூல்

இந்த டுடோரியல்ல டெம்ப்ளேட்ட யூஸ் பண்ணி குர்தாவோட முன், பின் அப்றம் ஸ்லீவ் பீஸ்களை எப்படி கட் பண்றது, ஃபேசிங் ஸ்ட்ரிப்ப உருவாக்கறது, முன் பின் பீஸ்களை ஒன்ணா வைச்சு தைக்கிறது எப்படி, நெக்லைனை ஃபேசிங் ஸ்ட்ரிப்ப இணைக்கிறது ஸ்லீவ்களை இணைக்கிறது, சைட் சீம்-அ ஃபினிஷ் பண்றது, ஸ்லிட்ல ஹெம் பண்றது எப்டி, அப்புறம் கடைசியா நெக்லைனை முடிக்கிறது எல்லாத்தையும் நீங்க கத்துக்கப்போறீங்க.

ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்கிங், கட்டிங்

உங்களுக்கு பிடிச்ச எந்த துணிய வேணாலும் எடுத்துக்கொங்க, வீடியோல காட்டிருக்கிற மாதிரி மடியுங்க. இப்ப, ஏ-லைன் குர்தாவோட முன் டெம்ப்ளேட்ட துணியோட உள்பக்கத்துல வையுங்க. துணில உள்ள மடிப்புகள டெம்ப்ளேட்ல மார்க் பண்ணி இருக்கற மடிப்புகளோட மேட்ச் ஆகுதான்னு பாத்துக்கங்க. இப்ப இந்த டெம்ப்ளேட்ட துணில வைச்சு பின் பண்ணனும். மணி கோர்த்த பின்ன எடுத்துட்டு மொத்த டெம்ப்ளேட்டயும் பின் பண்ணுங்க. இது முடிஞ்சதும் மார்கிங் பேனாவ வெச்சு டெம்ப்ளேட்ட துணில ட்ரேஸ் பண்ணுங்க. அப்புறம் டெம்ப்ளேட்லேந்து பின்ன எடுத்துட்டு அதை தனிய வையுங்க. கத்தரிக்கோல எடுத்துட்டு வரைஞ்ச லைன்ல கட் பண்ணுங்க, இதை ரொம்ப கவனமா செய்யணும், குர்தா நல்லா வர்றதும் வராததும் இதை பொருத்துதான் அமையும்.

மறுபடியும் துணிய நீளவாக்குல மடிங்க. அடுத்து, துணியோட வெளிப்பக்கத்தில பின்பக்க டெம்ப்ளேட்ட வையுங்க, முன்னால செய்தா அதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. மணிகோர்த்த பின்னால டெம்ப்ளேட்ட சரியான இடத்திலவைச்சு பின் பண்ணுங்க, அப்றம் டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. ட்ரேஸ் பண்ணினதுக்கு அப்புறம், டெம்ப்ளேட்டிலிருந்து பின்ன எடுத்துட்டு கத்திரிகோலால வரைஞ்சிருக்கற லைன்ல கட் பண்ணுங்க. நெக்லைன் ஷேப் வட்டமா இருக்குங்கறதால கவனமா கட் பண்ணுங்க. நீங்க கட் பண்ணி முடிச்சப்புறம் அது பாக்க இப்படி இருக்கணும்.







இப்ப மீதி உள்ள துணிய எடுத்துகிட்டு வெளிப்பக்கம், வெளிப் பக்கத்தை பாக்கற மாதிரி மடிங்க. ஸ்லீவ் டெம்ப்ளேட்ட துணி மேல வெச்சு பின் பண்ணுங்க. இது முடிஞ்சதும், ஸ்லீவ ட்ரேஸ் பண்ணிட்டு டெம்ப்ளேட்டிலிருந்து பின்னை எடுத்துருங்க. இப்ப டெம்ப்ளேட்ட தனியா எடுத்து வைச்சு கட் பண்றதுக்காக துணியை மறுபடியும் சரியான இடத்தில பின்பண்ணுங்க. அதுக்கு அப்புறம் கத்திரிகோல எடுத்துட்டு வரைஞ்ச லைன்ல கட் பண்ணுங்க. கட் பண்ணின ஸ்லீவ் துணியிலிருந்து பின்ன எடுத்துட்டா வீடியோல காட்டியிருக்கற மாதிரி ரெண்டு ஸ்லீவ் துண்டுங்க இருக்கும்.









அடுத்து நெக்லைனுக்கு நேர்த்தியான ஃபினிஷிங் கொடுக்க நாம ஃபேசிங் ஸ்ட்ரிப்ப உருவாக்கணும். ஏதாவது ஒரு மேட்சிங்கான துணிய எடுத்துகிட்டு அதை பாதியா மடிச்சு டேபிள் மேல வையுங்க. அடுத்து, ஏ-லைன் குர்த்தாவோட முன் டெம்ப்ளேட்ட எடுத்துகிட்டு, இதுல காட்டியிருக்க மாதிரி துணிய அது மேல வையுங்க. ரீகேப் பண்ண, இதுதான் நெக்லைனோட முன் பகுதி அப்புறம் இது தோள்பட்டை. இதுல காட்டியிருக்க மாதிரி நாம இந்த ரெண்டு பகுதிகளையும் ட்ரேஸ் பண்ணனும். இது முடிஞ்சதும், டெம்ப்ளேட்ட நீக்கிட்டு அளவு டேப்ப எடுங்க, வரைஞ்சிருக்கற முன் நெக்லைன்லேந்து சரியா ஒன்னரை இன்ச் அளந்துகிட்டு, மார்க் பண்ணிக்கொங்க வீடியோல காட்டியிருக்க மாதிரி வரைஞ்ச லைன் முழுக்க இதே மாதிரி செய்யுங்க. ஒரு ரூலரை யூஸ் பண்ணி மார்க் பண்ணின பாயின்ட் எல்லாத்தையும் சேர்த்து ஒரு நேர் கோடு வரைங்க. அப்புறம் துணிய சரியான இடத்திலவைச்சு வைச்சு பின் பண்ணிட்டு துணிலேந்து ஸ்ட்ரிப்ப கட் பண்ணுங்க.







பின் டெம்ப்ளேட்டுக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இதுதான் கழுத்தோட பின்பக்கம் அதனால வளைஞ்சி இருக்கு. நெக்லைனையும் தோள்பட்டையையும் வரைங்க. டெம்ப்ளேட்ட நீக்கிட்டு அளவு டேப்ப எடுங்க, வரைஞ்சிருக்கற வளைஞ்ச நெக்லைன்லேந்து சரியா ஒன்னரை இன்ச் அளந்துகங்க. இது முடிஞ்சதும், மார்க்கிங்க யூஸ் பண்ணி இன்னொரு கையால வளைவ வரைங்க. அப்புறம் சரியான இடத்தில துணிய பின் பண்ணிட்டு, பேக்- ஃபேசிங் ஸ்ட்ரிப்ப கட் பண்ணுங்க, நம்ப ரெண்டு ஸ்ட்ரிப்பும் பாக்க இப்படி இருக்கணும்.










ஸ்டெப் 2, முன், பின் பீஸ்களை இணைத்தல்

இப்ப நாம குர்தாவோட முன், பின் பீஸ்களை இணைக்கணும். முதல்ல குர்தாவின் முன் பக்கத்தை சரியான பக்கம் மேல இருக்க மாதிரி டேபிள்ல வைக்கணும், வெளிப்பக்கம் வெளிப்பக்கத்த நோக்கி இருக்க மாதிரி வைக்கணும். தோள்பட்டைகளை ஒன்னா சேர்த்து பின் பண்ணிரலாம். இப்ப தைக்கற நேரம். பின் செய்த பீஸ்களை உங்க உஷா ஜானோம் அல்லூர் டிக்ஸ் தையல் மிஷின்கிட்ட கொண்டு போங்க. அடுத்து பேட்டன் செலக்டார் டயலை A க்கு செட் பண்ணுங்க. இது நேர் தையலுக்கானது. அப்றம் தையல் நீள டயலை 2.5 ஆ செட் பண்ணுங்க. தோள்பட்டையின் விளிம்பை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்கத் தொடங்குங்க. தையல் பிரிஞ்சு வராம இருக்க ஆரம்பத்திலயும் முடிவுலயும் ரிவர்ஸ் தையல் போட மறக்காதீங்க, தைச்சிட்டே போகறப்ப பின்னை நீக்கிட்டே போங்க. கூடுதல் நூலை கட் பண்ணிட்டு இன்னொரு தோள்பட்டைக்கு போகணும். இப்ப நாம ரெண்டு தோள்களையும் தைச்சிட்டோம்












ஸ்டெப் 3 நெக் பேசிங் ஸ்ட்ரிப் தயாரித்தல், அதை நெக்லைனுடன் இணைத்தல்.

அடுத்து முன்பக்கத்தையும் பேக் ஃபேசிங் ஸ்ட்ரிப்பயும் எடுத்து பின்னை நீக்கணும். இப்ப அதை திறந்து, பின் பக்க ஸ்ட்ரிப்ப சரியான பக்கம் சரியான பக்கத்தை நோக்கி இருக்கற மாதிரி முன்பக்க ஸ்ட்ரிப் மேல வைச்சு வீடியோல காட்டி இருக்கற மாதிரி தோள்பட்டைய ஒன்றா பின் பண்ணனும்.

பின் செய்த ஃபேசிங் ஸ்ட்ரிப்ப தையல் மிஷினுக்கு கொண்டு போங்க. தைக்க ஆரம்பிங்க. தைக்கத் தொடங்கறப்ப பின்ன நீக்கணும் அப்புறம் ரிவர்ஸ் தையல் போடவும் மறக்காதீங்க. இந்த மாதிரி சின்ன ஸ்ட்ரிப்புக்குகூட இது முக்கியம். அதே மாதிரி அடுத்த பக்கத்தையும் தையுங்க.

இது முடிஞ்சதும், ஃபேசிங் ஸ்ட்ரிப்ப குர்தா பீஸ்ஸாட இணைக்கணும். இதுதான் நம்ம தோள்பட்டை லைன், இது நெக்லைன் இங்கதான் ஸ்ட்ரிப் இணைக்கப்படும். குர்த்தாவை திருப்புங்க, அப்பதான் அதன் வெளிப்பக்கம் உங்களை நோக்கி இருக்கும் இதுல காட்டி இருக்க மாதிரி அதுக்கு மேல ஸ்ட்ரிப்ப, வெளிப்பக்கம் வெளிப்பக்கத்தை நோக்கி இருக்க மாதிரி வைங்க. மூலைகளை அலைன் பண்ணி சரியான இடத்தில்வைச்சு பின் பண்ணுங்க. இப்ப நாம வீடியோல காட்டி இருக்க மாதிரி ஃபேசிங்க குர்தால வைச்சு தைக்கப்போறோம். தைச்சிட்டே போகறப்ப பின்ன நீக்கிட்டே போங்க. இது முடிஞ்சதும், இதை போட்டுக்கறப்ப துணி தூக்கிட்டு இல்லாம இருக்கறதை உறுதி செய்ய வி நெக் மேல வட்டமா உள்ள பின்பகுதி முழுசா ஸ்லாஷ் பண்ணுங்க. புது தையல் மேல கட் பண்ணிராம அடில மட்டும் கவனமா கட் பண்ணனும். இதை செய்தப்பறம், வீடியோல காட்டியிருக்க மாதிரி ஸ்ட்ரிப்ப திருப்பி, ஸ்ட்ரிப் மேல தையல் போடணும். கழுத்து முழுக்க இதைச் செய்யணும். நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும். இப்போதைக்கு கழுத்துப் பகுதிய அப்டியே விட்ருலாம்.





ஸ்டெப் 4 ஸ்லீவ் இணைத்தல்



நம்ப அடுத்த வேலை, ஸ்லீவ இணைக்கறது. ஸ்லீவ அதுக்கு பக்கத்தில வையுங்க. இப்ப ஸ்லீவ் நடுவுல நோட்ச் உருவாக்க ஸ்லீவ பாதிய மடிக்கணும். வெளிப்பக்கம் வெளிப்பக்கம் நோக்கி இருக்கற மாதிரி குர்தாவ வெச்சு அதுக்கு மேல ஸ்லீவ வையுங்க, அப்புறம் தோள் பட்டை லைனோட நோட்ச்-அ அலைன் பண்ணி சரியான எடத்தில பின் பண்ணுங்க. மொத்த ஸ்லீவ் வட்டத்திலயும் தொடர்ந்து பின் பண்ணுங்க.


இன்னொரு பக்கத்துக்கும் இதே ஸ்டெப்ப ரிபீட் பண்ணனும். ஸ்லீவ பாதியா மடிச்சு, நோட்ச் உருவாக்கி, தோள் லைனுக்கு நடுவுல இந்த நோட்சை மாட்ச் பண்ணி தோள்பட்டை எடத்தில அதை பின் பண்ணனும். இது முடிஞ்சதும், பண்ண இடத்தில இந்த பீஸ்களை ஒன்றா சேக்கலாம். பிரஸ்ஸர் ஃபூட்டோட ஸ்லீவ் முனைய அலைன் பண்ணி தைக்க தொடங்குங்க, தைச்சிட்டே போகறப்ப பின்னை நீக்கிட்டே வாங்க. ஒரு பக்கம் முடிஞ்சதும், அடுத்த பக்கத்துக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க.









ஸ்டெப் 5 சைட் சீம்ஸ், ஸ்லீவ் ஹெம், அடிப்பக்க ஹெம் முடித்தல்


ஸ்லீவ்ஸ இணைச்சதுக்கு அப்புறம், சைட் சீம் வேலைய பாக்கணும், ஸ்லீவோட ஆர்ம் ஹோல் பாயின்ட்ஸ ஜாயின் பண்ணி, வீடியோ காட்டியிருக்க மாதிரி சரியான இடத்தில அதை பின் பண்ணனும். இடுப்புகிட்ட வந்ததும் நிறுத்துங்க, ஏன்னா பக்க ஸ்லிட்டுக்கு இடம் விடணும். குர்தாவோட அடிப்பகுதிலேந்து 19 இன்ச் அளந்து, மார்க் பண்ணிக்கொங்க

ஸ்லிட்டோட ஆழம் ஆளுக்கு ஆளு மாறுபடும். நாங்க 19 இன்ச் அளந்திருக்கோம், ஆனா உங்க விருப்பப்படி இதை நீங்க மாத்திக்கலாம். அடுத்த பக்கத்திலயும் 19 இன்ச் அளந்துகிட்டு சைட் ஸ்லிட்டுக்கு மேல தொடர்ந்து பின் பண்ணுங்க.

இப்ப பின் பண்ணின சைட் சீம்-அ தைக்கணும். பிரஸ்ஸர் ஃபூட்டோட ஸ்லீவ் ஹெம்-அ அலைன் பண்ணிகிட்டு தைக்க தொடங்குங்க. ரிவர்ஸ் தையல் போட்டு தையலை லாக் பண்ண மறக்காதீங்க. தெச்சிட்டே பின்ன நீக்கிட்டே இருங்க. சைட் ஸ்லிட் மார்க் வர்றப்ப நிறுத்துங்க. இப்ப அடுத்த பக்கத்துக்கு மாறி ஸ்லீவோட அடிப்பகுதியிலிருந்து மார்க் வர்ற வரை தையுங்க.

ரெண்டு பக்கமும் முடிஞ்சதும், சைட் சீம்-ல விளிம்புங்க பிரியாம இருக்க ஜிக்-ஜாக் தையல் போடணும். பேட்டன் செலக்டார் டயலை C-லயும் தையல் நீள டயலை 1.5லயும் செட் பண்ணிகிட்டு தைக்க தொடங்குங்க. இந்த பிராசஸ் திரும்ப திரும்ப நடக்கற மாதிரி தெரியலாம் ஆனா இது நம்ப துணிக்கு ஒரு நேர்த்தியான ஃபினிஷிங் கொடுக்கும் ஸ்லிட் ஆரம்பத்திலிருந்து தொடங்கி ரெண்டு பக்க ஸ்லீவ் வரை தையுங்க. நாம ஸ்லீவ்ல ஜிக்-ஜாக் தையலும் போடணும். இது முடிஞ்சதும் உங்க தையல் பாக்க இப்படி இருக்கணும்.


இப்ப பக்கங்கள்ல ஹெம் பண்ற வேலை, இதை ஒரே தொடர்ச்சியான தையல்ல முடிக்கணும். இது எப்டின்னு நாங்க காட்றோம். முன் பக்க பீஸ் அடிப்பகுதியிலிருந்து ஆரம்பிங்க, துணிய உள்பக்கமா ரெண்டு தடவை அரை இன்ச் மடிச்சிக்கங்க, மடிச்ச பகுதிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில வையுங்க. ஆனா தைக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னால, பேட்டன் ஸ்ட்ரிச் செலக்டாரை நேர் தையலுக்கு அதாவது ஏ-லயும் தையல் நீளத்தை 2.5லயும் ரீசெட் பண்ணிக்கணும். தைக்க ஆரம்பிங்க, நேரா எதிர்முனைல உள்ள ஸ்லிட் வரை தையுங்க. பிவோட் டெக்னிக்கை யூஸ் பண்ணி துணியோட முன்பக்கத்திலேந்து பின்பக்கத்துக்கு போங்க. இந்த டெக்னிக்ல ஊசிய லிஃப்ட் பண்ணாமயே துணிய திருப்ப முடியும். கீழ பின்பக்க பீஸ் வரை தைச்சிட்டே போங்க, கூடுதலா உள்ள துணிய கட் பண்ணுங்க, இதுல காட்டியிருக்க மாதிரி நூல் பிரிஞ்ச மாதிரி உள்ள முனைகளை தொடர்ந்து மடிச்சுகிட்டே தொடர்ந்து தையுங்க. முன் ஸ்லிட்-அ பிவோட் பண்ணிகிட்டே எங்கேந்து ஆரம்பிச்சிங்களோ அந்த விளிம்பு வரை தைச்சிட்டே போங்க. இது எதுக்குன்னா, தைக்கறதை நிறுத்தாமயே ஒரே தொடர்ச்சியான ஹெம்மிங் செய்து முடிக்கதான்... அவ்ளோதான், அருமை!





அடுத்து ஸ்லீவ் ஹெம் பண்ணனும், இது பாட்டம் ஹெம்-அவிட ரொம்ப ஈசி. ஸ்லீவ உள்பக்கமா ரெண்டு தடவை அரை இன்ச் மடிங்க. ஆனா தைக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னால, வட்ட சீம் தைக்க சுலபமா இருக்க மிஷின்லேந்து ஆக்சஸரி பெட்டிய நீக்கிருங்க. இது முடிஞ்சதும், கூடுதலா உள்ள நூலை கட் பண்ணிட்டு இதையே இன்னொரு ஸ்லீவுக்கும் செய்யுங்க. குர்தாக்கு நேர்த்தியான ஃபினிஷிங் கொடுக்க அங்கங்க தொங்கற நூலை கட் பண்ண மறக்காதீங்க அப்றம் துணில தையல் புடைச்சிட்டு இல்லாம இருக்க சீம்-அ அயர்ன் பண்ணுங்க.

**ஸ்டெப் 6 நெக்லைனை முடித்தல்**



இந்த பிராசஸ்ல கடைசில ஸ்டெப் நெக்லைனை ஹெம் பண்றது, இதுக்கு நாம கைத் தையல் போடணும். இதுல காட்டி இருக்க மாதிரி ஃபேசிங் ஸ்ட்ரிப்ப உள்பக்கமா, ராங் சைட் நோக்கி மடிச்சி முனைய கையால தையுங்க. நெக்லைன் முழுக்க இப்படி தையுங்க, துணிய மடிச்சிட்டே தைக்கணும். அவ்ளோதான் முடிஞ்சிருச்சு.



நீங்க தைச்சு முடிச்ச குர்தா பாக்க இப்டி இருக்கணும். இது ரொம்ப பிரமாதமா இருக்குதானே? சவுகரியமா, ஸ்டைலிஷா, சிக்குனு இருக்கும், இது யாருக்கு வேணாலும் பொருந்தும். நீங்க என்ன நினைக்கறீங்கன்னு எங்களுக்கு சொல்லுங்க. அப்புறம் லைக் பண்ண கமெண்ட் பண்ண, சப்ஸ்கிரைப் பண்ண மறக்காதீங்க.